# வேலை வாய்ப்பு அறிவிப்பு
# மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம், கரூர்

கரூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் அவர்களது அதிகாரத்திற்கு உட்பட்டுள்ள கரூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் காலியாக உள்ள ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு தகுதி வாய்ந்த நபர்கள் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு சென்னை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் பேராணை எண் A1/2112/2021, நாள்:21/12/2021-ல் வழங்கப்பட்டுள்ள உத்தரவின்படி, அரசாணைக்கு உட்பட்டு, கல்வித்தகுதி, வயது மற்றும் பிற தகுதிகள் பெற்றிருக்கும் நபர்கள் மட்டும் இத்துடன் கண்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து பதிவு தபால் மூலம் தலைவர், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,கரூர் அவர்களுக்கு 28.03.2022 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும்.

| வ.எண் | இனசுழற்சி | பதவியின்பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைப் பெண்கள் - முன்னிரிமையற்றவர் (SCHEDULED CASTE WOMEN DESTITUTE WIDOW – NON PRIORITY) | அலுவலக உதவியாளர் | 1 |

1. குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யவோ தலைவர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது.
3. மேற்படி நேர்காணலுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

<u>விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-</u>

**தலைவர்,**
**மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,**
**நகராட்சி கட்டிடம் முதல் தளம்,**
**ஆசாத் ரோடு, கரூர் - 639 001.**

<u>அலுவலக உதவியாளர் பணிக்கான கல்வித்தகுதி மற்றும் வயதுவரம்பு:-</u>

1. 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. 01.07.2022 அன்று வயது வரம்பு:-
   *(மனித வள மேலாண்மைத்(எஸ்) துறையின் அரசு ஆணை(நிலை)எண்.91, நாள்:13.09.2021 அரசு விதிகளின்படி)

<table>
<tr><td>1.</td><td>SCA</td><td>-</td><td rowspan="2">தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைப் பெண்கள் - முன்னிரிமையற்றவர்(SCHEDULED CASTE WOMEN DESTITUTE WIDOW–NON PRIORITY)வயது வரம்பு 18-லிருந்து 37-க்குள் இருக்க வேண்டும்</td></tr>
<tr><td>2.</td><td>SC</td><td>-</td></tr>
<tr><td>3.</td><td>ST</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>4.</td><td>MBC</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>5.</td><td>BC</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>6.</td><td>OC</td><td>-</td><td>-</td></tr>
</table>

3. அலுவலக உதவியாளர் பணிக்கான ஊதிய விகிதம்:
   Basis Pay Rs.15,700/- + DA + HRA

# விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | பாலினம் | : | ஆண்/பெண்/திருநங்கை |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 4. | வயது | : | |
| 5. | பிறந்த தேதி | : | |
| 6. | தேசிய இனம் | : | |
| 7. | மதம் | : | |
| 8. | இனப்பிரிவு மற்றும் ஜாதிச்சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். | : | |
| 9. | முகவரி | : | |
| 10. | விண்ணப்பிக்கும் பதவி | : | |
| 11. | கல்வித் தகுதி | : | |
| 12. | வாகன ஓட்டுநர் உரிமம் போன்ற மற்ற தகுதிகள் | : | |
| 13. | விண்ணப்பதாரர் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) அல்லது குற்றவழக்கு நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் அதன் விபரங்கள் | : | |
| 14. | அலைபேசி எண் (Mobile No.) | : | |
| 15. | மின்னஞ்சல் முகவரி (E-Mail ID) (எதுவும் இருந்தால்) | | |
| 16. | புலனம் எண் (Whatsapp No.) | : | |

புகைப்படம்

நான் ______________________________ த/க/பெ ___________________________ ஆகிய என்னால் மேலே சொல்லப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

மனுதாரர் கையொப்பம்

நாள் : .03.2022
இடம் : கரூர்.

குறிப்பு:- விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, வயது, முகவரி மற்றும் சாதி சான்றிதழ் ஆகியவற்றிற்கான ஆவணங்களின் நகல்கள் சான்றொப்பம் செய்து அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

## விண்ணப்பத்தாரர்களுக்கான அறிவுரைகள்

1. விண்ணப்பங்கள் அதற்கான படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, பதிவுதபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. புகைப்படத்தை விண்ணப்பத்தில் அதற்கென குறிப்பிட்டுள்ள இடத்தில் ஒட்ட வேண்டும். புகைப்படத்தின் மேல்புறம் சுய சான்றொப்பமிட வேண்டும். புகைப்படத்தை விண்ணப்பத்தில் பின் அடித்து இணைக்கக்கூடாது.

3. உரிய முறையில் சுய சான்றொப்பமிட தேவையான சான்றாவனங்களின் நகல்களை மட்டுமே விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக்கூடாது.

4. முழுவதுமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சுயவிலாசமிட்ட ரூ.50/-க்கான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட உறையுடன் இவ்வலுவலகத்திற்கு பதிவுத் தபால் மூலமாக 28.03.2022 மாலை 5.45 மணிக்குள் கிடைக்கத்தக்க அளவில் கீழே கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். 28.03.2022 அன்று மாலை 5.45 மணிக்கு மேல் வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நேர்காணல் மூலமாக மேற்கண்ட காலியிடம் நிரப்பப்படும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:-

**தலைவர்**
**மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்**
**நகராட்சி கட்டிடம் முதல் தளம்**
**ஆசாத் ரோடு கரூர் - 639001.**

6. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

7. விண்ணப்பத்தாரர்களின் அடையாள மற்றும் இருப்பிட சான்றுக்காக கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் புகைப்பட நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். (ஓட்டுநர் உரிமம், பான்கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை& ஆதார் அட்டை)

**8. நேர்முகத் தேர்வு தேதி மற்றும் நேரம் ஆகியவற்றை குறுஞ்செய்தி மூலம் பின்னர் அனுப்பப்படும்.**

நாள் : 17.03.2022

இடம் : கரூர்

(ஒம்/-)
தலைவர் (பொ.),
மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்
கரூர்.